# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2107/30 - 2019 ජනවාරි මස 23 වැනි බදාදා - 2019.01.23

*2107/30 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) ஆம் பிரிவின் கீழ், பண்டாரவளை மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

பிரதி மாநகர முதல்வர், மாநகர முதல்வராக நியமிக்கப்பட்டமை காரணமாக பண்டாரவளை மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வர் ஒருவரின் பதவி வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) ஆம் பிரிவின் கீழ், பிரதி மாநகர முதல்வர் பதவி வகித்த ஜனக நிஷாந்த ரத்னாயக என்பவர் அங்கம் வகிக்கின்ற சுயேச்சைக் குழு இல. 01 இன் தலைவர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் பிரதி மாநகர முதல்வர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக்குழுவைச் சேர்ந்தவரும் பண்டாரவளை மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான பிரதி மாநகர முதல்வர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட சுயேச்சைக் குழு இல. 01 இன் தலைவரால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஹீன்கெந்த முதியன்சேலாகே மித்ரபால ஹீன்கெந்த என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது பண்டாரவளை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் எச். ஐ. ஆர். ஹத்துருசிங்ஹ ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஹீன்கெந்த முதியன்சேலாகே மித்ரபால ஹீன்கெந்த என்பவர் பண்டாரவளை மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எச். ஐ. ஆர். ஹத்துருசிங்ஹ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பண்டாரவளை மாநகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
பதுளை,
2019, சனவரி 23.

02-275